# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1871/42 - 2014 ජූලි මස 18 වැනි සිකුරාදා - 2014.07.18

*1871/42 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 33/1973*

**1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டம்**

*1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தின் 8 ஆம் மற்றும் 29 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 82அ என்னும் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

அப்துல் ரவூப் ஹக்கீம்,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
*2014, யூலை 11.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க பிரிவிடல் (நில அளப்பனவுகளுக்கு செலுத்தப்படற்பாலதான கட்டண வீதங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள கட்டண வீதங்கள் 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தின் நியதிகளின்படி பிரிவிடல் வழக்கொன்று தொடர்பில் மேற்கொள்ளப்படும் பூர்வாங்க நில அளப்பனவு தொடர்பாக அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்களாதல் வேண்டும்.

3. இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள கட்டண வீதங்கள் 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தின் நியதிகளின்படி வழக்கொன்று தொடர்பில் மேற்கொள்ளப்படும் இறுதி நில அளப்பனவு தொடர்பில் அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்களாதல் வேண்டும்.

4. 1996, ஒகத்து 15 ஆந் திகதியிடப்பட்டு, 936/11 ஆம் இலக்க , அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளாலும், 2005, ஒகத்து 15 ஆந் திகதிய 1406/1 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியாலும் திருத்தப்பட்டவாறான 1995, திசெம்பர் 1 ஆம் திகதிய 899/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நில அளப்பனவுச் செலவின ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 2)

### பூர்வாங்க நில அளப்பனவுக்கு அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள்

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | பூர்வாங்க நில அளப்பனவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் வேலையின் விபரங்கள் | அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள் |
| 1. | கட்சிக்காரர்களுக்கு பதிவஞ்சல் மூலம் அறிவித்தல் வழங்குதல் : | கடிதங்களைப் பதிவு செய்வதற்கென குறித்துரைக்கப்பட்ட கட்டண வீதமும் அத்துடன் அறிவித்தல் ஒவ்வொன்றுக்கும் 20 ரூபாவும் |
| 2. | வாய்மூலம் பிரசித்தம் செய்யும் ஆளின் கூலிகளும் பயணச் செலவுகளும் | 2,500 ரூபாவும், அமைவிடத்துக்குப் பயணம் செய்து திரும்புவதற்கான பஸ் வண்டிப் பிரயாணச் செலவும் |
| 3. | பின்வரும் காணி தொடர்பில் நில அளப்பனவு மேற்கொள்ளப்படுமிடத்து- | |
| | (அ) காணி (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின் : | 250 சதுர மீற்றர் வரைக்கும் 10,000 ரூபாவும் அத்துடன் ஒவ்வொரு மேலதிக 100 சதுர மீற்றருக்கு 1,000 ரூபாவும் |
| | (ஆ) (i) காணி 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின்<br>(ii) காணி 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட முதலீட்டுச் சபையால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் அதிகார இடப்பரப்பிற்குள் அல்லது உரிமம் பெற்ற ஏதேனும் வலயத்திற்குள் அமைந்திருக்குமாயின்; | 250 சதுர மீற்றர் வரைக்கும் 7,500 ரூபாவும் அத்துடன் ஒவ்வொரு மேலதிக 500 சதுர மீற்றருக்கு 1,000 ரூபாவும் |
| | (இ) (i) காணி (255 ஆம் அத்தியாயமான), நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகர சபை இடப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின் ;<br>(ii) காணி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிரதேச சபை இடப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின் | 1000 சதுர மீற்றர் வரைக்கும் 6,000 ரூபாவும் அத்துடன் ஒவ்வொரு மேலதிக 250 சதுர மீற்றருக்கும் 750 ரூபாவும் |
| | (மேற்குறிப்பிட்ட அளப்பளவு, வரைபடம் மற்றும் அறிக்கையைத் தயாரித்தல், இணைப் பிரதிகளை வழங்கல், வரைபடத்தில் நிலைபடுத்தலினால் உருவாக்கப்பட்ட உப துண்டாடல்களைக் காண்பித்தல் : வரைபடத்தில் அபிவிருத்தி மற்றும் இட வர்ணனை இயல்புகளைக் காண்பித்தல் என்பவற்றை உள்ளடக்கும்). | |

**அட்டவணை I** (தொடர்ச்சி)

(ஒழுங்குவிதி 2)

**பூர்வாங்க நில அளப்பனவுக்கு அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள்**

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | பூர்வாங்க நில அளப்பனவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் வேலையின் விபரங்கள் | அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள் |
| 4. | உதவியாளருக்கான கூலிகள் - | |
| | (அ) நிபுணத்துவமுள்ள உதவியாளருக்கு | 1,500 ரூபா |
| | (ஆ) நிபுணத்துவமில்லாத ஒவ்வொரு உதவியாளருக்கும் | 1,200 ரூபா |
| | ஆயின், எவ்வாறாயினும், உதவியாளர்களின் எண் ணிக்கை, நிபுணத்துவமுள்ள உதவியாளர் உட்பட, ஏழுக்கு மேற்படுதலாகாது. | |
| 5. | நில அளவையாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்களின் நிமித்தம் அளப்பனவு ஒரே நாளில் பூர்த்தி செய்யப்பட முடியாதவிடத்து, பின்வரும் கட் டண வீதம் அறவிடப்படும். | |
| | (அ) நில அளவையாளருக்கான உயர் தொழில் கட்டணம் | 4,000 ரூபா |
| | (ஆ) நிபுணத்துவமுள்ள உதவியாளருக்கு | 1,500 ரூபா |
| | (இ) நிபுணத்துவமற்ற ஒவ்வொரு உதவியாளருக்கும் | 1,200 ரூபா |
| | ஆயின், எவ்வாறாயினும், உதவியாளர்களின் எண்ணிக்கை, நிபுணத்துவமுள்ள உதவியாளர் உட்பட, ஏழுக்கு மேற்படுத லாகாது. | |
| 6. | நிலஅளவையாளரின் உயர் தொழில் கட்டணம் | சான்றளிப்பது உட்பட, எல்லாக் கடமைகளையும் செய்வதற்கு நாளொன்றுக்கு 4,000 ரூபா |
| 7. | நில அளப்பனவுக்கான ஆகக் குறைந்த வைப்பீடு | 2,000 சதுர மீற்றர் வரைக்கும் 10,000 ரூபாவும் மேலதிக ஒவ்வொரு 1,.000 சதுர மீற்றருக்கும் 2,500 ரூபாவும். |
| 8. | 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட வெள்ளவத்தை, கிருலப்பனை மற்றும் தெஹிவளை இடப்பரப்புக்களில், சொத்துவத்தையும், நில அளவு விபரங்களையும் காட்டும் வரைபடத்தை (கடஸ்டரல்) தயாரித்தல் | மேற்குறிப்பிடப்பட்ட 1 தொடக்கம் 5 வரையிலான விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக 40 ரூபாவுமான கொடுப்பனவு |
| 9. | அளப்பனவைச் செய்து முடிக்க இயலாதவாறு நிலஅளவையாளர் தடை செய்யப்பட்டு இடையீடு செய்யப்படுமிடத்து:- | |
| | (அ) நில அளவையாளருக்கான உயர் தொழில் கட்டணம் | 4,000 ரூபா |
| | (ஆ) நிபுணத்துவமுள்ள உதவியாளருக்கு | 1,500 ரூபா |
| | (இ) நிபுணத்துவமற்ற ஒவ்வொரு உதவியாளருக்கும் | 1,200 ரூபா |
| | ஆயின், எவ்வாறாயினும், உதவியாளர்களின் எண்ணிக்கை, நிபுணத்துவமுள்ள உதவியாளர் உட்பட, ஏழுக்கு மேற்படுதலாகாது. | |

*அட்டவணை II*

(ஒழுங்குவிதி 3)

**இறுதி நில அளப்பனவுக்கு அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள்**

| இல. | *நிரல் I*<br>இறுதி நில அளப்பனவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் வேலையின் விபரங்கள் | *நிரல் II*<br>அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள் |
|---|---|---|
| *1.* | கட்சிக்காரர்களுக்கு பதிவஞ்சல் மூலம் அறிவித்தல் வழங்குதல் | கடிதங்களைப் பதிவு செய்வதற்கென குறித்துரைக்கப்பட்ட கட்டண வீதமும் அத்துடன் அறிவித்தல் ஒவ்வொன்றுக்கும் 20 ரூபாவும் |
| *2.* | வாய்மூலம் பிரசித்தம் செய்யும் ஆளின் கூலிகளும் பயணச் செலவுகளும் | 2,500 ரூபாவும், அமைவிடத்துக்குப் பயணம் செய்து திரும்பு வதற்கான பஸ் வண்டிப் பிரயாணச் செலவும் |
| *3.* | பின்வரும் காணி தொடர்பில் நில அளப்பனவு மேற்கொள் ளப்படுமிடத்து- | |
| | (அ) காணி (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின் | 250 சதுர மீற்றர் வரைக்கும் 10,000 ரூபாவும் அத்துடன் ஒவ்வொரு மேலதிக 100 சதுர மீற்றருக்கும் 1,000 ரூபாவும் |
| | (ஆ) (i) காணி 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின்<br>(ii) காணி 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட முதலீட்டுச் சபையால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் அதிகார இடப்பரப்பிற்குள் அல்லது உரிமம் பெற்ற ஏதேனும் வலயத்திற்குள் அமைந்திருக்குமாயின்; | 250 சதுர மீற்றர்கள் வரைக்கும் 7,500 ரூபாவும் அத்துடன் ஒவ்வொரு மேலதிக 500 சதுர மீற்றருக்கும் 1,000 ரூபாவும் |
| | (இ) (i) காணி (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகர சபை இடப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின் ;<br>(ii) காணி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிரதேச சபை இடப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்குமாயின் | 1,000 சதுர மீற்றர்கள் வரைக்கும் 6,000 ரூபாவும் அத்துடன் ஒவ்வொரு மேலதிக 250 சதுர மீற்றருக்கும் 750 ரூபாவும் |
| | (மேற்குறிப்பிட்ட நிலஅளப்பனவு, வரைபடம் மற்றும் அறிக்கையைத் தயாரித்தல், இணைப் பிரதிகளை வழங்கல், வரைபடத்தில் நிலைபடுத்தலினால் உருவாக்கப்பட்ட உப துண்டாடல்களைக் காண்பித்தல் : வரைபடத்தில் அபிவிருத்தி மற்றும் இட வர்ணனை இயல்புகளைக் காண்பித்தல் என்பவற்றை உள்ளடக்கும்). | |

***அட்டவணை II*** (தொடர்ச்சி)

(ஒழுங்குவிதி 3)

**இறுதி நில அளப்பனவுக்கு அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள்**

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | இறுதி நில அளப்பனவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் வேலையின் விபரங்கள் | அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள் |
| 4. | உதவியாளருக்கான கூலிகள் :- | |
| | (அ) நிபுணத்துவமுள்ள உதவியாளருக்கு | 1,500 ரூபா |
| | (ஆ) நிபுணத்துவமில்லாத ஒவ்வொரு உதவியாளருக்கும்: | 1,200 ரூபா |
| | ஆயின், எவ்வாறாயினும், உதவியாளர்களின் எண்ணிக்கை, நிபுணத்துவமுள்ள உதவியாளர் உட்பட, ஏழுக்கு மேற்படுதலாகாது. | |
| 5. | நில அளவையாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சந்தர்ப்பங்களின் நிமித்தம் அளப்பனவு ஒரே நாளில் பூர்த்தி செய்யப்பட முடியாதவிடத்து, பின்வரும் கட்டண வீதம் அறவிடப்படும். | |
| | (அ) நில அளவையாளருக்கான உயர் தொழில் கட்டணம் | 4,000 ரூபா |
| | (ஆ) நிபுணத்துவமுள்ள உதவியாளருக்கு | 1,500 ரூபா |
| | (இ) நிபுணத்துவமற்ற ஒவ்வொரு உதவியாளருக்கும் | 1,200 ரூபா |
| | ஆயின், எவ்வாறாயினும், உதவியாளர்களின் எண்ணிக்கை, நிபுணத்துவமுள்ள உதவியாளர் உட்பட, ஏழுக்கு மேற்படுதலாகாது. | |
| 6. | நிலஅளவையாளரின் உயர் தொழில் கட்டணம் | சான்றளிப்பது உட்பட, எல்லாக் கடமைகளையும் செய்வதற்கு நாளொன்றுக்கு 4,000 ரூபா |
| 7. | 1. நில அளப்பனவு செய்வதற்காக: | |
| | (அ) பூர்வாங்க அளப்பனவைச் செய்த அதே நில அளவையாளக்கு, பூர்வாங்க அளப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் ஓராண்டுக்குள்ளாக பிரிவிடுவதற்கான ஆணை வழங்கப்படுமாயின், | பூர்வாங்க நில அளப்பனவுக்கான அளப்பனவுக்குக் கொடுபடற்பாலதான கட்டணத்தின் அரைவாசி (1/2). |
| | (ஆ) பூர்வாங்க அளப்பனவின் பின்னர் ஓராண்டுக்கு மேலாக அதே நில அளவையாளருக்கு அல்லது வேறொரு நில அளவையாளருக்கு ஆணை வழங்கப்படுமாயின், | பூர்வாங்க நிலஅளப்பனவுக்கான அளப்பனவுக்குக் கொடுபடற்பாலதான கட்டணத்தின் முக்கால்வாசி (3/4) |
| 8. | (அ) துண்டாக்கல்கள் படத்தைத் தயாரித்தல்<br>(ஆ) நிலத்தில் காணித்துண்டுகளைத் தயாரித்தல் | முதலாவது பத்து காணித்துண்டுகளுக்கும் 4,000 ரூபாவும் ஒவ்வொரு மேலதிகக் காணித்துண்டுக்கும் 50 ரூபாவும். |
| | (i) 500 சதுர மீற்றர் வரையிலான ஒரு காணித் துண்டுக்கு | 1,000 ரூபா |
| | (ii) 1,000 சதுர மீற்றர் வரையிலான ஒரு காணித் துண்டுக்கு | 1,250 ரூபா |
| | (iii) 2,000 சதுர மீற்றர் வரையிலான ஒரு காணித் துண்டுக்கு | 1,500 ரூபா |
| | (iv) 4,000 சதுர மீற்றர் வரையிலான ஒரு காணித் துண்டுக்கு | 2,000 ரூபா |
| | (v) 4,000 சதுர மீற்றருக்கு அதிகமானதற்கு | 2,500 ரூபா |

**அட்டவணை II** (தொடர்ச்சி)

(ஒழுங்குவிதி 3)

**இறுதி நில அளப்பனவுக்கு அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள்**

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | இறுதி நில அளப்பனவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் வேலையின் விபரங்கள் | அறவிடப்படற்பாலதான கட்டண வீதங்கள் |
| 9. | நட்டஈடு அல்லது ஒப்பாக்கம் அளிக்கும் நோக்கத்துக்காக நிலம், பயிர்கள், கட்டிடங்கள், வேறு கட்டமைப்புகள், ஏனைய சீர்திருத்தங்கள் என்பவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்தல் | முதற்படி 10,000 ரூபா 1/4 வீதத்தில் அடுத்தபடி 20,000 ரூபா 1/2 வீதத்தில் |
| | (i) முதலாவது கட்டத்துக்கு | 50,000 ரூபா 1% ரூபா 500 ; |
| | (ii) இரண்டாவது கட்டத்துக்கு | 50,000 ரூபா 3/4% ரூபா 375 ; |
| | (iii) மூன்றாவது கட்டத்துக்கு | 50,000 ரூபா 1/2 % ரூபா 250 ; |
| | (iv) நான்காவது கட்டத்துக்கு | 50,000 ரூபா 1/4 % ரூபா 125 ;<br>2,00,000 ரூபா 1,250 ரூபா ; |
| | (v) 2,00,000 ரூபாவுக்கு மேற்பட்டதற்கு | மதிப்பீட்டின் 1/8 % |
| 10. | மதிப்பீட்டு அட்டவணையையும் விநியோகப் பொழிப்பையும் தயாரித்தல் | முதல் நான்கு காணித்துண்டுகளுக்கும் 250 ரூபாவும் ஒவ்வொரு மேலதிக காணித்துண்டுக்கும் 150 ரூபாவும். |

8- 213

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.